தெரிவித்திருக்கிறேன். எல்லா பாயின்ட் ஆப் ஆர்டர்களையும் நீக்கிவிடுவேன் என்று சொல்லவில்லை.

* * * *

ஆகவே,

நான் அவ்வாறு தீர்ப்பு வழங்கினேன். (திரு. முனு ஆதி குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டரைப் பயன்படுத்தி, அதற்குச் சம்பந்தப்படாதவற்றை எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தால் அது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது. அது நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறாது என்பது தீர்ப்பு. (திரு. முனு ஆதி, திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி, திரு. கே. டி. கே. தங்கமணி ஆகியோர் ஒரே நேரத்தில் எழுந்தார்கள்) திரு. தங்கமணி தன்னுடைய கருத்தைச் சொல்லட்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த பாயின்ட் ஆப் ஆர்டரைப்பற்றி விதி 83-ல் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற தடவை சில திருத்தங்களைக் கொண்டு வந்தோம். அவற்றில் சில, சபாநாயகருக்கு அதிக அதிகாரத்தைக் கொடுப்பதாகவும், சில அவருக்கு இருக்கின்ற அதிகாரத்தை குறைப்பதாகவும் இருந்தன. சபாநாயகருடைய அதிகாரத்தைக் குறைப்பது தவறு என்று அப்போதே வாதிட்டோம். சபையை நடத்திச் செல்வதில் சபாநாயகருக்கு ஏதாவது சிக்கல் ஏற்படுமானால், சிக்கல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். குறிப்பாக அமைச்சர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது பலர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி அடிக்கடி குறுக்கிடக் கூடாது என்பதற்கான பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி விதி 83 பிற்பகுதியில் தங்களுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சபையின் நேரம் வீணாகாமலிருக்கத் தங்களுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் சொல்வது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்றால் 'தெயர் இஸ் நோ பாயின்ட் ஆப் ஆர்டர்' என்று சொல்லி விடலாம்; குறிப்பிலிருந்து நீக்க வேண்டியதில்லை.

* * * *

(4) அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற நடைமுறை விதிகள் 6 (1)-ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்.

(1) திரு. க. சுப்பு

(2) திரு. என். கணபதி

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.